25th September 1958]

இல்லை யென்றால், அங்கே ஒரு சௌகரியமும் செய்துகொள்வதற்கு அவர்களுக்கே அக்கறை இல்லை என்பதைத்தான் அது எடுத்துக்காட்டுகிறது. ஆகவே, பிற்பட்ட பகுதிகளில் மக்கள் உடலுழைப்பு கொடுப்பது மிகவும் சுலபமாக இருக்கவேண்டும். அதற்குப் பதிலாக ஒன்றுமே இல்லாமல் சர்க்காரே செய்துகொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே போனால், மக்கள் முன்னேற்றம் அடைவதற்கு இது சாதகமாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

Sri V. SUBBIAH : பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமங்களுக்கு அந்த டோக்கன் காண்ட்ரிப்யூஷன் என்று சொல்லக்கூடிய சதவிகிதம் என்ன? உடலுழைப்பு இல்லாவிட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சதவிகிதம் எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : நூற்றுக்கு 50 பங்கு மக்களால் உடலுழைப்பாகவோ பொருளாகவோ கொடுக்கவேண்டும் என்பது சாதாரணமாக அனுசரிக்கக்கூடிய விதி. ஆனால், பிற்போக்குப் பகுதிகளில் மக்கள் நூற்றுக்கு 25 பங்கு கொடுத்தால் போதும் என்று இருக்கிறது. அதைவிடப் பிற்போக்கான மக்கள் இருக்கும், ஹரிஜன அல்லது வேறு பிற்போக்கான வகுப்பினர் இருக்கின்ற இடங்களிலே சில வேலைகளுக்காக அவர்கள் நூற்றுக்குப் பத்து பங்கு கொடுத்தால் போதுமானது என்று இருக்கிறது. இதுமாதிரி, வேலைகளுக்குத் தகுந்த பிரகாரம் விதி மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

Sri C. MUTHIAH PILLAI : சமுதாய அபிவிருத்தித் திட்டப் பகுதிகளிலே ஹரிஜன இலாகாவிலிருந்து பங்குத் தொகை கொடுப்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அம்மாதிரி பத்து சதவிகிதம் என்று குறைக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதிகளிலே பாக்கி இருக்கும் தொகை சர்க்காரிலிருந்து—ஹரிஜன முன்னேற்றத் தொகையிலிருந்தோ அல்லது வேறு தொகையிலிருந்தோ—கொடுக்கப்படுகிறது.

Sri T. L. SASIVARNA THEVAR : முதுகுளத்தூர் தொகுதியிலே காண்ட்ரிப்யூஷன் இல்லாமல் சர்க்காரே வேலைகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தை கலெக்டர் சிபார்சு செய்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதுபற்றி அரசாங்கம் என்ன முடிவு செய்திருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதுவும் நாம் ஏற்றுக்கொண்டிருக்கும் அபிவிருத்தித் திட்டத்திற்கு மிகவும் முரணானது என்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகையால், கொஞ்சமாவது மக்களுடைய காண்ட்ரிப்யூஷனும் திட்டத்தில் இருந்தால்தான், அவர்கள் இன்னும் தொடர்ந்து வேலைகளை எடுத்துக்கொள்வதற்கும், தங்களுடைய வேலையாகவே கருதிச் செய்வதற்கும் உதவியாக இருக்கும்.

Supply of midday meals in Elementary Schools

*512 *Q.*—Sri M. C. MUTHUKUMARASWAMY : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1957–58-ல் தஞ்சை ஜில்லாவில் எத்தனை ஆரம்பப் பள்ளிகளில் பகல் உணவு அளிக்கப்பட்டது—

(ஆ) அதற்காக அரசாங்கம் செலவிட்ட தொகை எவ்வளவு ?

(இ) இதுவரை பகல் உணவு ஆரம்பிக்கப்பட்டு நிறுத்தியுள்ள பாடசாலைகள் எத்தனை?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) 359.

(*b*) Rs. 24,711·81.

(*c*) Nil.

SRI. M. C. MUTHUKUMARASWAMY : பகல் உணவுக்காக அரசாங்கம் கொடுக்கும் ஆறு நயா பைசாவை வைத்துக்கொண்டு அநேக இடங்களில் நடத்த முடியாமல் இந்தத் திட்டத்தை விட்டு விடுகிறார்கள். அதற்குக் காரணம், உணவுப் பொருள்களின் விலை அதிகமாக இருப்பது தான். ஆகவே, ஆறு நயா பைசா கொடுக்கும் முறையை மாற்றி, அதற்குப் பதிலாக ஒன்பது நயா பைசா விகிதத்தில் கொடுப்பதற்கு அரசாங்கம் யோசிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதில் முழுத் தொகையையும் சர்க்கார் ஏற்றுக்கொள்வதாக இந்தத் திட்டத்தில் இல்லை. ஒரு பகுதியைத் தான் சர்க்கார் கொடுப்பதாகவும், மற்ற பகுதியை அங்கிருக்கும் மக்களே ஏற்றுக்கொண்டு இந்தத் திட்டத்தை நடத்த வேண்டும் என்பதாகவும் சர்க்காருடைய கொள்கை. ஆறு நயா பைசாவுக்கு மேல் இப்பொழுது கொடுக்க முன்வருவோமேயானால், பல இடங்களில் இந்தத் திட்டத்தை விரிவாக்குவதற்குப் பதிலாக சுருக்கவேண்டி ஏற்படும்.

SRI A. V. P. ASAITHAMBI : அரசாங்கம் இதற்காக ஒதுக்கிச் செல விடுகிற இந்தப் பணம் மாணவர்களுக்குச் சரிவர செலவழிக்கப்படாத படி இடையிலே இருக்கிறவர்கள் அதை எடுத்துக்கொள்கிறார்கள் என்ற புகார் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால், அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதுவரையிலும் அம்மாதிரி புகார் எனக்கு வரவில்லை. இந்தத் திட்டம் நன்றாக நடந்து வருகிறது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். ஆனால், இவ்வளவு பரவலாக நடக்கும்போது ஒரு சில இடங்களில் குறைகளே இல்லாமல் இருக்கிறதென்று சொல்லவும் முடியாது. ஏழைக் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் இந்த முக்கியமான திட்டத்திலேயும் மக்கள் பங்கு போட ஆரம்பிப்பார்களானால், நம்முடைய சமுதாயம் எப்படி முன்னேறப் போகிறது என்று நாம் அங்கலாய்க்க வேண்டியிருக்கிறது.

SRI M. S. SELVARAJAN : இலவச பகல் உணவுத் திட்டத்தை மிகச் சிறந்த முறையில் அமுல் நடத்தக்கூடிய ஜில்லா கல்வி அதிகாரிகளுக்குப் பரிசு வழங்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறதா ? அல்லது, அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு வேறு முறைகள் பரிசீலிக்கப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றியும் ஆலோசிக்கலாம். ஆனால், உத்தியோகஸ்தர்கள் பரிசுக்காகத்தான் நல்ல வேலை செய்ய வேண்டும் என்ற மனப்பான்மையை வளர்ப்பதும் தவறு.

SRI K. RAMACHANDRAN : விநியோகம் சம்பந்தமாக புகார் எதும் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அனேகமாக இந்த ரீதியிலேதான் நடத்தப்படுகிறது. உண்மையிலேயே குழந்தைகளுக்கு பகல் உணவு கொடுக்கப்படவில்லை. இதுதான் உண்மையாக நடக்கிறது. ஆகையால், அந்தந்த ப்ளாக் டெவலப்மெண்ட் மூலமாக இந்த வேலையை நடத்துவதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : I am sorry, Sir, that the hon. Member should make a sweeping statement that it is merely on paper. On the other hand, I have visited many places and, apart from my visit, we have made surprise inspections also. On the whole this scheme is working very well. I request hon. Members not to create an impression or atmosphere that this also could be misused.

SRI S. NAGARAJA MONIGAR : இவ்வளவு உபயோககரமான ஒரு திட்டத்தை, குழந்தைகளுக்குப் பகல் உணவு அளிக்கும் திட்டத்தை, நிறைவேற்றுவதிலே பெற்றோர்களே முன்வந்து முழுவதும் பொறுப்பேற்று

25th September 1958]

நடத்தவேண்டியிருக்க, சர்க்கார் இதில் எவ்வளவோ செய்யும்போது, சர்க்கார் சிப்பந்திகள் கெடுத்துவிடுகிறார்கள், தவறு செய்து விடுகிறார்கள் என்று மாத்திரம் சொல்லிக்கொண்டிருப்பது அவ்வளவு தகுதியாகுமா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : யாரைக் கேட்கிறீர்கள் ? மந்திரியையா ? என்னையா ? அல்லது கனம் அங்கத்தினர் ராமச்சந்திரன் அவர்களையா ? (சிரிப்பு.)

SRI K. PERIANNAN : இந்தப் பகல் உணவு திட்டத்தை எல்லா பிற்பட்ட மாணவர்களுக்கும் கிடைக்கும்படியாக எல்லா ஜில்லாக்களிலும் அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ? 9-10 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது பரவலாக எல்லாப் பகுதிகளிலும் விஸ்தரிக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. 1957–58–ம் வருஷம் 8,721 இடங்களில் இரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் குழந்தைகளுக்கு உணவு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இந்த வருஷத்தில் இந்தத் தொகை அதிகமாயிருக்கிறது. எல்லா ஏழைக் குழந்தைகளுக்கும் உணவு கொடுக்கவேண்டுமென்பதுதான் சர்க்காரின் திட்டம். ஆனால் அது படிப்படியாகத்தான் விஸ்தரிக்கப்படும்.

Use of wheel barrows and hand-carts by scavengers

* 513 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have issued order to stop the practice of carrying night-soil in baskets and buckets on one's head in municipalities and local bodies;

(*b*) whether the Government have undertaken to provide wheel barrows and hand-carts to scavengers working in all the local bodies;

(*c*) the amount spent for that purpose in 1955–56 and 1957–58; and

(*d*) the extent of aid received so far from the Union Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Suitable instructions have been issued to the local bodies.

(*b*) A scheme is under consideration.

(*c*) Nil.

(*d*) Nil.

SRI M. JAGANNATHAN : Are the Government aware of the fact that still in many municipalities and local boards in our State, scavengers are asked to carry night-soil in buckets and baskets placed of their heads which is inconsistent with human dignity as such?

MR. SPEAKER : The first part of the hon. Member's question is all right. But the second part, viz., ' inconsistent with human dignity ' and all those things need not form part of the question. We all know it.